அனுதர்ஷி கபிலன்

# இலங்கையின் வடபகுதிச் சமூகமும் பண்பாட்டு ரீதியான பெண்களுக்கெதிரான வன்முறைகளும்


ஆய்வுச் சுருக்கம்

இலங்கைப் பல்லின, பல மத மற்றும் பல்வேறு பண்பாடுகளையும் பின்பற்றக்கூடிய மக்களைக் கொண்ட தீவாகும். இலங்கையில் 12.6 வீதமானவர்கள் இந்து மதத்தைப் பின்பற்றுகிறார்கள். இலங்கையின் வடக்கு மாகாணத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். இங்குள்ள பெரும்பாலான தமிழர்கள் இந்து மதத்தையும் அதனூடான பண்பாடுகளையும் பின்பற்றுகிறார்கள். மதத்தையும் அதனூடான பண்பாடுகள் மற்றும் பழக்க வழக்கங்கள் போன்றவற்றை இறுக்கமாகப் பின்பற்றும் போது அது வன்முறையாகப் பரிணமிக்கின்றமையை இவ் ஆய்வு சுட்டிக் காட்டுகின்றது. இவ் ஆய்வில் விடய ஆய்வுமுறை ஓர் ஆய்வு முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளது. இதற்காக எழுந்த மாதிரியாகப் பத்து (10) மத்திம வயதுப் பெண்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வின் மாதிரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை, இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பண்பாட்டு ரீதியாகக் கட்டியமைக்கப்பட்ட கலாசாரமே இன்று வரை பெண்களுக்கெதிரான அனைத்துப் பின்னடைவுகளுக்கும் வன்முறைகளுக்கும் காரணமாக உள்ளது. இதனை சமூகத்திலிருந்து குறைப்பதற்குச் சமூகமயமாக்கல் செயற்பாட்டினூடாகப் பெண் சமத்துவம், பெண் கல்வி என்பவற்றைக் குடும்பத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

திறவுச் சொற்கள்: வடமாகாணம், இந்து மதம், பண்பாடு, பால்நிலை, வன்முறை

## அறிமுகம்

மதம் மனிதனை நல்வழிப்படுத்தத் தோன்றியது என்கிறார்கள். ஆனால், பெரும்பாலும் மதம் என்பது அதிகாரத்திற்கு ஆதாரமாகத் தான் இருக்கிறது. அவ்வாறான மதத்தின் வழியான நடைமுறைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மனிதநேயத்தைக் கேள்விக்குள்ளாக்குவதைக் காணலாம். இந்து மதம் மற்றும் தமிழ் பண்பாட்டின் எல்லாத் தளங்களிலும் பெண் வன்முறைகளை எதிர்கொள்கிறாள். உதாரணமாக, மதத்தின் பெயரால் சாதிய ஒடுக்குமுறைகள், பால்நிலை ரீதியான ஒடுக்குமுறைகள் எனப் பல நடந்தேறிவருகின்றன. இதில் பெண்களும் பாலினப்புதுமையினரும் (Transgender) அதிகம் பாதிப்புக்கு உள்ளாகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. மதம் மற்றும் பண்பாட்டின் பெயரால் வாழவிடாமல் செய்வதாகத்தான் இந்த நடைமுறைகள் காணப்படுகின்றன. இந்து மதம் பிறப்பால் அனைவரும் சமம் என்பதை ஏற்க மறுக்கிறது என்கிறார், அம்பேத்கர். மதம் ஓர் அபின் என்கிறார் மார்க்ஸ். பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு அடிப்படையாக மதங்கள் இருக்கின்றன. குறிப்பாக, இந்து மத நடைமுறைகளால் ஒரு பெண் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறுபட்ட வன்முறைகளை எதிர்கொள்கிறாள். இலங்கையிலும் இந்துக்கள் அதிகம் வாழும் வடமாகாணத்தில் இந்து மதம் மற்றும் பண்பாட்டு ரீதியான பால்நிலை சார்ந்த வன்முறைகள் வெளிப்படையாகவும் இலைமறை காயாகவும் இடம்பெற்று வருகின்றன.

## ஆய்வும் கலந்துரையாடலும்

ஆய்வானது இலங்கையின் வடமாகாணத்தில் இடம்பெறும் இந்து மதம் மற்றும் பண்பாட்டு ரீதியான பால்நிலை சார்ந்த வன்முறைகள் தொடர்பில் ஆராய்கிறது. குறிப்பாக, இந்து மதம் பிரயோகிக்கும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கவனத்தில் எடுக்கிறது.

பெண் குழந்தை பிறந்து ஒரு மாதமளவில் இடம்பெறும் காதணி விழாவை பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கான ஒரு வடிவமாகக் கொள்ளலாம். இதனைச் சுயமாகச் சிந்திக்க முடியாத குழந்தையின் மீதான ஒரு பண்பாட்டுத் திணிப்பாகத் தான் பார்க்கமுடியும். கட்டாயத்தின் பேரில் மூக்குத்தி அணியத் தூண்டுதலும் இவ்வாறான ஒரு வன்முறையே.

தமிழ்ப் பெண் குழந்தைகளைச் சிறுவயது முதல் பூ, பொட்டு இடுவதற்குப் பழக்கப்படுத்தும் சமூகம், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதனைப் பெண்கள் மீது திணிக்கின்றது. பூ மற்றும் பொட்டிடுதல் பெண்களின் தெரிவாக இருக்கவேண்டும். மாறாகப் பொட்டு இடுதல் முகலட்சணத்துக்கு உரியது எனச் சொல்லிக்கொள்ளும் அதே சமூகம் கணவனை இழந்த பெண் பொட்டிடுவதை எதிர்க்கிறது. அதையும் மீறிப் பொட்டு இடும் கணவனை இழந்த பெண்களை மதத்தின் பெயரால் மிக மோசமாக விமர்சிக்கின்றது. கணவனை இழந்த பெண்களை, தாம் மங்கலகரமான விழாக்கள் என அழைக்கும் விழாக்களில் அமங்கலம் எனக்கூறி ஒதுக்குகிறார்கள் அல்லது முன்னிலைப்படுத்துவதில்லை. கணவனை இழந்த பெண்களைத் தமது பிள்ளைகளின் திருமண விழாக்களிலேயே "விதவை" எனக் குறிப்பிட்டு ஒதுக்குதல் வடமாகாணச் சமூகத்தில் சர்வசாதாரணமாக அரங்கேறும் ஒரு விடயமாக இருக்கிறது. தனது பிள்ளைகளின் நல்வாழ்வில் தாயை விட அதிக அக்கறை கொண்டவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது என்பது இங்கு புறந்தள்ளப்படுகிறது.

பூப்புனிதநீராட்டு விழா அல்லது சாமத்தியச் சடங்கு எனச் சொல்லப்படுகின்ற நடைமுறைகள் பெண்ணின் முதல் மாதவிடாய்க்குப் பின் இடம்பெறுவதாகும். இது பெண் திருமணத்திற்குத் தயாராகிவிட்டாள் எனச் சொல்லுவதற்காக ஏற்பாடு செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். இவ்வாறான சடங்குகள் பெண்ணை இழிவுபடுத்துவதாகவே இருக்கின்றன. முதல் மாதவிடாய் வந்துவிட்டதை ஊருக்கு வெளிச்சம் போட்டுக் கொண்டாடும்

*இந்துமத நாடான நேபாளத்தில் மாதவிடாய்க் காலத்தில் தனியான குடிசைகளில் தங்க வைக்கப்பட்ட பெண்கள் மரணித்த சம்பவங்கள் பலவற்றை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். இந்து மதத்துடன் தொடர்புடைய இந்தப் பழங்கால நம்பிக்கைகள் மாதவிடாய்க் காலத்தில் பெண்களை அசுத்தமானவர்களாகச் சித்திரிக்கின்றன. இது இயற்கையான விடயம் என ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற இந்தச் சமூக நடைமுறைகள் பெண்களுக்குப் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்துகின்றன.*

இதே சமூகம் தான், மாதாந்தம் வரும் மாதவிடாயை வெளியில் சொல்ல வெட்கப்பட வேண்டும் என்பது போன்றதான ஒரு மாயையை உருவாக்கி விடுகின்றது. நப்கின்ஸ் அதாவது, மாதவிடாய் துவாய்களைக் கடையில் வாங்கும் போது யாருக்கும் தெரியாதவண்ணம் பத்திரிகையில் சுற்றி வழங்கும் செயற்பாடு இதற்குச் சிறந்த உதாரணம். மாதவிடாய்க் காலங்களில் பெண்கள் தனிமைப்படுத்தப்படுதல், பூஜை அறைக்குள் அனுமதிக்காமை, கோவிலுக்குள் பெண்களை அனுமதிக்காமை, தீட்டு அல்லது தூய்மையின்மை எனக் குறிப்பிடல் போன்றவற்றை வன்முறையின் இன்னொரு வடிவமாகப் பார்க்கலாம்.

இந்துமத நாடான நேபாளத்தில் மாதவிடாய்க் காலத்தில் தனியான குடிசைகளில் தங்க வைக்கப்பட்ட பெண்கள் மரணித்த சம்பவங்கள் பலவற்றை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். இந்து மதத்துடன் தொடர்புடைய இந்தப் பழங்கால நம்பிக்கைகள் மாதவிடாய்க் காலத்தில் பெண்களை அசுத்தமானவர்களாகச் சித்திரிக்கின்றன. இது இயற்கையான விடயம் என ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற இந்தச் சமூக நடைமுறைகள் பெண்களுக்குப் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. இந்து மதத்தைப் பின்பற்றுகின்ற பெரும்பாலான நாடுகளில் இது போன்ற மதரீதியான மற்றும் பண்பாட்டு ரீதியான வன்முறைகள் அதிகம் இடம்பெறுகின்றன.

பாரம்பரிய இந்து முறைப்படியான திருமண நடைமுறைகளும் கன்னிகாதானம் போன்ற சடங்குகளும் பெண்ணை ஒரு பொருளாகவே உருவகிப்பதனைக் காணலாம். கொலிசு, மெட்டி மற்றும் தாலி அணிதலும் சீதன நடைமுறைகளும் பெண்களுக்கெதிராகக் கையாளப்படும் வன்முறைகளாகப் பார்க்க முடிகிறது. பெண்ணுக்கான பெரும்பாலான சடங்குகள் உடல் சார்ந்தும் பாலியல் சார்ந்தும் அமைந்திருக்கின்றன. பெண் மறுமணம் செய்வதனையும் இந்தச் சமூகம் எதிர்க்கின்றமையைக் காணலாம்.

“பின் தூங்கி முன் எழுவாள் பெண்” மற்றும் “குடும்பப்பெண்” போன்ற பதங்கள் இந்தச் சமூகத்தில் பெண்ணை ஒடுக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஜாதகம் பார்த்தல் மற்றும் மத ரீதியான மூடநம்பிக்கைகள், போலிச்சடங்குகள் ஊடாகவும் பல சந்தர்ப்பங்களில் பெண் இழிவுபடுத்தப்படுகின்றாள். ராசி இல்லாதவள், ஜாதகம் சரியில்லை என இந்தச் சமூகம் பெண்ணை மாத்திரமே குற்றஞ்சாட்டுகிறது. இந்து மதத்தில் பின்பற்றப்படுகின்ற சாதியம் கூட அதிகளவில் பெண்கள் மீதே பிரயோகிக்கப்படுகின்றது.

கன்னிப் பெண், மலடி, முதிர்கன்னி, விதவை,

*இந்து மற்றும் தமிழ்ப் பண்பாட்டில் ஆண்கள் தான் எல்லா விடயங்களுக்கும் தலைமை தாங்குவதற்கு முன்னிலைப்படுத்தப் படுகிறார்கள். பொது விழாக்களில் முதல் பந்தியில் உணவு உண்ணுவதற்கான வாய்ப்பு ஆண்களுக்கே உரியதாகப் பார்க்கப்படுகிறது. சமயத் தலைவர்களாகவோ பூசாரிகளாகவோ இந்துமதம் பெண்களை அங்கீகரிப்பது மிகக்குறைவு. அதுமட்டுமல்லாமல், பெண்ணை உடைமையாகவும் போகப் பொருளாகவும் தான் இந்தச் சமூகம் பார்க்கின்றமையைக் காணமுடிகிறது.*

அமங்கலம், மானம், புனிதம், தீட்டு, நாணம், கற்பு போன்ற பதங்களைப் பெண்களுக்கு உரியதாகப் பேசும் இந்த சமூகம் இதன் மூலம் எதை வலியுறுத்துகின்றது? பெண்களை அடக்குமுறைக்குள் உள்வாங்கும் ஒரு வடிவமே இதுவாகும்.

*"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்*
*திண்மையுண் டாகப் பெறின்"*

என்கிறது திருக்குறள். இதில் கூறப்பட்டதன்படி பெண் இருக்க வேண்டும் என்கிறது. இதனை வாழ்க்கைநெறியாகப் பின்பற்றும் இந்தச் சமூகத்தில், பெண்ணுரிமை என்பது சாத்தியம் அற்றதாகக் காணப்படுகின்றமையை அவதானிப்புக்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்து மற்றும் தமிழ்ப் பண்பாட்டில் ஆண்கள் தான் எல்லா விடயங்களுக்கும் தலைமை தாங்குவதற்கு முன்னிலைப்படுத்தப் படுகிறார்கள். பொது விழாக்களில் முதல் பந்தியில் உணவு உண்ணுவதற்கான வாய்ப்பு ஆண்களுக்கே உரியதாகப் பார்க்கப்படுகிறது. சமயத் தலைவர்களாகவோ பூசாரிகளாகவோ இந்துமதம் பெண்களை அங்கீகரிப்பது மிகக்குறைவு. அதுமட்டுமல்லாமல், பெண்ணை உடைமையாகவும் போகப் பொருளாகவும் தான் இந்தச் சமூகம் பார்க்கின்றமையைக் காணமுடிகிறது.

இந்துமத நூலான மனுதர்ம சாஸ்திரம், உலகப் பொதுமறையாகக் கொள்ளப்படும் திருக்குறள் போன்றவை கூட பெண்ணுக்கான சமத்துவத்தை வழங்கத் தவறிவிட்டன. அதுமட்டுமல்லாமல் தமிழ் இலக்கிய நூல்களும் பெண்ணின் கற்பு, அழகு, மென்மை மற்றும் பாலியல் பொருளாக வர்ணித்தல் போன்றவற்றைப் பேசுபொருளாக வைத்துப் பெண்ணை அடிமைப்படுத்துவனவாகவே பெரும்பாலும் இருக்கின்றன. இலங்கைத் தமிழர்களும் இவற்றை இன்றும் பின்பற்றுவதைக் காணலாம். அத்துடன், இன்றில்லாத போதும் ஆரம்ப காலங்களில் இந்து மத வழக்கத்தில் உடன்கட்டையேறுதல், பால்ய விவாகம் போன்ற மிக மோசமான வன்முறைகள் இருந்தமையைக் கடந்தகால ஆய்வுகள் பறைசாற்றுகின்றன. இவ்வாறான மதம் மற்றும் பண்பாட்டு ரீதியான வன்முறைகள் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தான் இருந்து வந்திருக்கின்றன.

நடை, உடை, பாவனைகளைக் கூட சமூகத்திற்குப் பயந்து மேற்கொள்ளும் பெண்கள் வடமாகாண சமூகத்தில் அதிகம். தமக்கு எதிராகப் பிரயோகிக்கப்படும் வன்முறைகள் குறித்த புரிதல் இன்றி அவை வன்முறைகள் என்று தெரியாமலே பல பெண்கள் இங்கு இருக்கின்றமையை அவதானிக்கமுடிகிறது. சமூகத்தில் உயர் பதவிகளில் இருக்கும் பல படித்த பெண்கள் தாம் சார்ந்த மதமும்

சமூகமும் சொல்வதை ஏற்று அதனைப் பின்பற்ற விரும்புவதாகச் சொல்கிறார்கள். "ஊரோடு ஒத்து வாழ வேண்டும்" என்பது பல பெண்களின் கருத்தாக இருக்கிறது.

இந்து மதம் மற்றும் தமிழ்ப் பண்பாடு சார்ந்து சமூகத்தில் உள்ள பெரும்பாலான நடைமுறைகளைப் பிற்போக்குத்தனம் எனக் கருதும் பெண்கள் கூட அதைச் சமூகத்திற்காக, சமூகத்தின் வசைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் பின்பற்றுவதாகக் குறிப்பிடுகிறார்கள். தாம் தமக்காக வாழ முற்பட்டால் தமது எதிர்கால வாழ்க்கை மற்றும் திருமணம் போன்றவற்றில் சிக்கல்கள் ஏற்படும் என்பது அவர்களது கருத்தாக இருக்கிறது.

இவற்றையெல்லாம் கடந்து பெண்களுக்கெதிரான சமய, பண்பாட்டு ரீதியான வன்முறைகளை எதிர்த்துக்கொண்டு, தமக்காக வாழும் பெண்கள் இல்லாமல் இல்லை. மிகக் குறைந்தளவிலான பெண்களே தாம் தனித்துவத்துடன் தமக்குப் பிடித்த மாதிரியாக வாழ்வதாகவும், தமக்கெதிரான வன்முறைகளையும் பண்பாட்டுத் திணிப்பையும் எதிர்ப்பதாகவும் குறிப்பிடுகின்றனர்.

### முடிவுரை

இலங்கையின் வடமாகாணச் சமூகத்தில் வெளிப்படையாகவும் இலைமறை காயாகவும் இருக்கும் அறிவுடன் தொடர்புபடாத இந்துமத நடைமுறைகள் மாற்றமடைய வேண்டும். பெண் விடுதலையையோ, சமத்துவத்தையோ, சுயமரியாதையையோ ஏற்றுக்கொள்ளாத மதம் எப்படி சமூக மாற்றத்தையும் ஆக்கபூர்வமான சமுதாயத்தையும் கட்டியெழுப்பும்? மனித சமத்துவத்தைப் பேணும் வகையிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடாத வகையிலும் இந்துமதம் சீர்திருத்தப்படவேண்டும். பெண்கள் தமக்கெதிரான பண்பாட்டு ரீதியான வன்முறைகள் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருத்தல் அவசியம். பெண்களுக்கெதிரான சமய, சமூக, பண்பாட்டு ரீதியான வன்முறைகள் தொடர்பில் சமூகத்தில் தெளிவு ஏற்படுத்தப்படுதல் இன்றியமையாததாகும். வாழ்வியலுக்குப் பொருத்தமற்ற பழைய மரபுகளை உடைத்துப் புதிய மரபுகளை உருவாக்குதல் அவசியம். தேவைப்படின் மீண்டும் அந்த மரபுகளை உடைத்து புதிய மரபுகளை உருவாக்குதல் காலப்பொருத்தமாகும்.

### பரிந்துரைகள்

இலங்கை முழுவதையும் உள்ளடக்கிய இந்து, பௌத்தம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாமிய மதங்களில் உள்ள பால்நிலை ரீதியான வன்முறைகள் தொடர்பில் ஆழமான ஆய்வுகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். வெவ்வேறு மதங்களுடனான ஒப்பீட்டு ரீதியான ஆய்வாகவும் இதனை மேற்கொள்ளலாம்.

### உசாத்துணை நூல்கள்


சிவத்தம்பி,க.(2000), யாழ்ப்பாணம்:சமூகம் பண்பாடு கருத்துநிலை, குமரன் அச்சகம், கொழும்பு 12.

சுண்முகதாஸ்,ம.(1991), சாதியும் துடக்கும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிறைவேட் லிமிடெட், சென்னை.

புத்மநாதன்,சி.(2001), இலங்கைத்தமிழர் தேச வழமைகளும், சமூக வழமைகளும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு—சென்னை.

Van de veer, P. (2000). India, Religion of, Inter—national Encyclopedia of the social and Behavioral sciences, Elsevier. Ltd, 7279—7282. Retrieved from http://doi.org/10.1016/Bo—08—043076—7/04040—7.

Battaglia, L.J. (2015).Women in Buddhism, Inter—national Encyclopedia of the social and Behavioral sciences, Elsevier. Ltd, 978—0—08—097087—5. Re—trieved from https://www.sciencedirect.com/science/article/pii/B9780080970868840 57X.



(கட்டுரையாளர்: விரிவுரையாளர், ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இலக்கண உலகம் எடுத்துக்காட்டாத இப்பொருத்தங்கள் பற்றிய சிந்தனை பன்னிருபாட்டியலுக்குப் பின் வந்த பாட்டியல் நூல்களாலும் பின்பற்றப்பட்டது என்றாலும் இலக்கியப் புலவர்கள் இப்பொருத்தம் பற்றிய இலக்கண வரையறையைச் சற்றேனும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் இங்கு நாம் அறிய வேண்டுவதாம். எனவேதான் பாட்டியல் போன்று பொருத்தங்களைக் கூறும் பாட்டியல் நூல்கள் தமிழுக்குத் தீங்கினையே இழைத்தன என்பர் அறிஞர்.

பாட்டியல் நூல்களால் ஆன நன்மையும் ஒன்று உண்டு. தமிழில் உள்ள இலக்கிய வகைகளின் இலக்கணத்தைத் தொகுத்துக் கூறும் அரும்பணியைப் பாட்டியல் நூல்களே தொடங்கி வைத்தன.

வருணப்பொருத்தம் இனப்பாகுபாடாய் அமைந்துள்ளது. தொல்காப்பியர் முதல், இடை, கடை நிற்கும் எழுத்துக்களையே உரைக்கின்றார். இனத்திற்கான எழுத்துக்களைப் பாட்டியல் நூல்கள் உரைப்பது தமிழ் மரபு நெறிக்கு ஒவ்வாததாகும். இதைப் பிற்காலப் போக்கு எனலாம்.

பாட்டியல் நூலாசிரியர்களுக்கிடையே பல்வேறு கருத்துகள் நிலவுவது போலவே இதனைக் கற்போர் மனதிலும் ஒத்த கருத்துகள் எழுவதற்கில்லை என்பதை மேலே கண்ட செய்தி குறிப்பால் அறியலாம்.

## தொகுப்புரை:

பாட்டியல் நூல்கள் தனி அடையாளம் பெற்று இலக்கண வரிசையில் ஒன்றாக அங்கீகாரம் பெறவில்லை. இந்நூல்களுக்குள் புதுமையும், புரிதலில் தெளிவின்மையும் விரவி காண கிடைக்கின்றன.

இது நூலாசிரியரின் குறைபாடா அல்லது கற்போர் கவனம் செல்லாத பகுதியா என அறியமுடியவில்லை. மேலும் பாட்டியல் மீதான குழப்பம் கலைந்து தெளிவான நீரோடைபோல் இதன் வரையறைக்கு முற்றுபுள்ளி வைக்க பல்வேறு கட்ட ஆய்வுகள்தான் தீர்வாக அமையும்.

## சான்றெண் விளக்கம்

1. Dr. A. Chidambaranatha Chettiar, Advanced studies in Tamil prosody, P. 134

2. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு — 10 ஆம் நூற்றாண்டு, பக்—232,233

3. ந.வீ.செயராமன், பாட்டியல் திறனாய்வு, ப—12

4. பன்னிரு பாட்டியல், நூ— 39

5. ந..வீ. செயராமன், பாட்டியலும் இலக்கிய வகைகளும், ப— 17

6. மேலது, ப— 18

7. ந..வீ..செயராமன், பாட்டியல் திறனாய்வு ப— 21

7(a). அரங்க. நலங்கிள்ளி, பாட்டியல் — ஓர் ஒப்பாய்வு, ப—134

8. இரா. சீனிவாசன், தமிழ் இலக்கண மரபுகள் கிபி 800—1400 ப—13

## துணைநூற்பட்டியல்


இரா. சீனிவாசன் (2000): தமிழ் இலக்கண மரபுகள் கிபி 800—1400, பார்க்கர், சென்னை.

அரங்க. நலங்கிள்ளி (1983): பாட்டியல்கள் ஓர் ஒப்பாய்வு, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ், இலக்கியத்துறைக்கு அளிக்கப்பட்ட முனைவர் பட்ட ஆய்வேடு.

டாக்டர் ந.வீ செயராமன் (1981): பாட்டியலும் இலக்கிய வகைகளும், பார்க்கர், சென்னை.

டாக்டர் ந.வீ செயராமன் (1977): பாட்டியல் திறனாய்வு, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

மு. அருணாச்சலம் (1969): தமிழ் இலக்கிய வரலாறு பத்தாம் நூற்றாண்டு, பார்க்கர், சென்னை.



(கட்டுரையாளர்: முனைவர் பட்ட ஆய்வாளர், அ.வ.அ. கல்லூரி (தன்னாட்சி), மன்னன்பந்தல், மயிலாடுதுறை – 609305.)